# வலயக்கல்வி அலுவலகம் - வவுனியா வடக்கு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2022

### சைவ சமயம்

சுட்டெண் ........................................  தரம்: 08  நேரம் - 2.00 மணித்தியாலம்

## பகுதி I

- **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

1) சைவசமயத்தின் முழுமுதற் கடவுள் யார்?
   1) விநாயகர்  2) முருகன்  3) சிவபெருமான்  4) வைரவர்

2) ஆலய அமைப்பில் மகா மண்டபம் குறிப்பது?
   1) சிரசு  2) மார்பு  3) வயிறு  4) கழுத்து

3) விசேட காரணத்தின் பொருட்டு நடைபெறும் கிரியை?
   1) நைமித்தியக் கிரியை  2) காமியக் கிரியை
   3) நித்தியக் கிரியை  4) பூர்வ கிரியை

4) பெண்கள் செய்யும் நமஸ்காரம்?
   1) அட்டாங்க நமஸ்காரம்  2) திரியாங்க நமஸ்காரம்
   3) அங்கப் பிரதட்சணம்  4) பஞ்சாங்க நமஸ்காரம்

5) மாசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் நோக்கப்படுவது?
   1) யோக சிவராத்திரி  2) மஹா சிவராத்திரி
   3) நித்திய சிவராத்திரி  4) யோக சிவராத்திரி

6) "காப்பதோர் வில்லும் அம்பும்..." என்ற பாடலில் குறிப்பிடப்படுபவர்?
   1) பூசலார்  2) இளையான்குடிமாற நாயனார்
   3) சண்டேஸ்வரர்  4) கண்ணப்பநாயனார்

7) படிக்காசு பெற்று பஞ்சம் நீக்கிய தலம்?
   1) திருவாவடுதுறை  2) திருமறைக்காடு
   3) திருவீழிமிழலை  4) சீர்காழி

8) பார்வதி திருமணம் நடைபெற்ற நாள்?
   1) வைகாசி விசாகம்  2) ஆனி உத்தரம்  3) பங்குனி உத்தரம்  4) ஆடிப்பூரம்

9) "பக்தோற்சவம்" சிறப்பாக நடைபெறும் சிவாலயம்?
   1) நகுலேஸ்வரம்  2) முன்னேஸ்வரம்  3) திருக்கேதீஸ்வரம்  4) திருக்கோணேஸ்வரம்

10) "ஆலந்தானுகந்து அமுது..." என்ற பாடலில் குறிப்பிடப்படும் இறைவனின் அருட் செயல்?
   1) கங்கையை தரித்தமை  2) நஞ்சு உண்டமை
   3) சோதிப்பிழம்பாகத் தோன்றியமை  4) சந்திரனை சூடியமை

11) நமஸ்காரம் செய்யும் போது கால்கள் நீட்ட வேண்டிய திசை?
   1) கிழக்கு, வடக்கு   2) கிழக்கு, மேற்கு   3) மேற்கு, தெற்கு   4) வடக்கு, தெற்கு

12) புராணங்கள் எத்தனை?
   1) பத்து   2) பதினெட்டு   3) இருபத்தெட்டு   4) நூற்றெட்டு

13) சைவசமயத்தின் முதல் நூல்கள்?
   1) புராணம், இதிகாசம்   2) ஆகமம், உபநிடதம்
   3) வேதம், ஆகமம்   4) ஆரணியம், பிராமணம்

14) திருமுறைகளைத் தொகுத்தவர்?
   1) நம்பி காட நம்பி   2) நம்பியாண்டார் நம்பி
   3) நாதமுனி   4) இராஜராஜசோழன்

15) "பூழியர்கோன்" என சிறப்பிக்கப்பட்டவர்?
   1) சுந்தரர்   2) திருவாதவூரர்   3) திருநாவுக்கரசர்   4) திருஞானசம்பந்தர்

( 15 × 2 = 30 புள்ளிகள் )

- **பின்வரும் சொற்களைக் கொண்டு கீறிட்ட இடத்தை நிரப்புக.**
  **(கஜபாகுவினால் / உலகப்படைப்பு / காளத்திமலை / சூக்குமலிங்கம் / திருச்சாழல்)**

1. ஆலம் விதைக் கதையினூடாக ................................................................. விளக்கப்படுகிறது.
2. மூலமூர்த்தியின் வெளிப்படையான குறியீடாக ................................................................. விளங்குகிறது.
3. குடும்பித்தேவர் .....................................................யில் கோயில் கொண்டுள்ளார்.
4. கண்ணகி அம்மன் வழிபாடு ........................................................... அறிமுகப்படுத்தப்பட்டது.
5. வாதத்தில் இடம்பெற்ற வினாக்களும் விடைகளுமாக மாணிக்கவாசகர் .................................................... பாடினார்.

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

- **தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. பன்னிரெண்டு வருடம் | பிறந்தநாள் |
| 2. திருமறைக்காடு | அருகில் வசித்தல் |
| 3. நாள் மங்கலம் | கோயில் |
| 4. உபவாசம் | கும்பாபிஷேகம் |
| 5. சிதம்பரம் | கதவு திறத்தல் |

**(5 × 2 = 10 புள்ளிகள்)**

## பகுதி II

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01) பின்வரும் பாடல்களில் இரண்டினை வரிக்கிரமமாக எழுதி, பாடியவர், தலம் என்பவற்றைக் குறிப்பிடுக.

1) “கற்றாங்கு எரியோம்பிக்...”
2) “மண்ணில் நல்ல வண்ணம்...”
3) “பெருகலாம் தவம் பேதைமை...”
4) “பண்ணின் நேர் மொழி...”

(2 × 10 = 20 புள்ளிகள் )

02) சுருக்கமான விடை எழுதுக.

1) “கடவுள்” என்ற சொல்லின் பொருள் யாது?
2) மும்மலங்களும் எவை?
3) நீர் எவ்வாறு ஆலயத்திற்கு செல்ல வேண்டும் எனக் குறிப்பிடுக?
4) கிரியைகளின் அங்கங்கள் எவை?
5) புதுவருடப்பிறப்பு கொண்டாட்டத்தின் விசேட அம்சங்கள் எவை?
6) விரத காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான செயற்பாடுகள் எவை?
7) முறிகண்டிப் பிள்ளையாரின் சிறப்பு யாது?
8) உபநிடதங்கள் நான்கினைக் குறிப்பிடுக?
9) புராண இதிகாசக் கதைகளில் கூறப்படும் இறைவனின் அருட்செயல்கள் மூன்றினைக் குறிப்பிடுக?
10) சைவப்பெரியார் சிவபாதசுந்தரணர் சைவ சமயத்திற்கு ஆற்றிய தொண்டுகள் எவை?

(10 × 3 = 30 புள்ளிகள் )